முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 261/2020

இன்று 2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விசாலாட்சி | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : ரவி | கிராமம் | : எஸ்.வி.காலனி |
| வயது | : 56 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 10-10-2025 | மாவட்டம் | : திருப்பூர் |

முதல் விசாரணை தொடர்ச்சி:

நான் வழக்கின் 2ம் பிரதிவாதியாவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவை ஆகும். அவற்றை நான் நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். எனது தரப்பு சான்றாவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணங்களின் விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 14.06.1982 | பாக பாத்திய விடுதலை பத்திரம் ஆவண எண் 1250/1982 | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 23.06.1982 | பாக பாத்திய விடுதலை பத்திரம் ஆவண எண் 1296/1982 | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.3 | 01.07.2016 | தான செட்டில்மெண்ட் பத்திரம் ஆவண எண் 8275/2016 | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.4 | 24.08.2016 | தான செட்டில்மெண்ட் ரத்து பத்திரம் ஆவண எண் 10542/2016 | அசல் |
| பி.வா.சா.ஆ.5 | 25.10.2016 | 1,2 பிரதிவாதிகள் பெயரிலுள்ள கிரய பத்திரம் ஆவண எண் 12843/2016 | அசல் |
| பி.வா.சா.ஆ.6 | 16.11.2016 | வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகள் பெயரிலுள்ள கூட்டுப் பட்டா எண் 3229 | உண்மை நகல் |
| பி.வா.சா.ஆ.7 | 19.05.2025 | 1,2 பிரதிவாதிகள் பெயரிலுள்ள சொத்து வரி ரசீது | அசல் |

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.8 | 05.08.2023 | 1,2 பிரதிவாதிகள் பெயரிலுள்ள மின் கட்டண ரசீது | இணைய வழி ரசீது |

(பி.வா.சா.ஆ.7 ஆவணம் தாவா தாக்கல் செய்த பின்னிட்டு பெறப்பட்ட ஆவணம் என்று வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை செய்தார். ஆட்சேபணை பதிவு செய்யப்பட்டது. ஆட்சேபணையுடன் பி.வா.சா.ஆ.7 ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது.)

வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக தாவா ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2025.10.10 16:49:18 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.